IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.258/2017
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி அனுபார்கவி த.பெ.சொக்கலிங்கம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 22.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. மெஜிரா கோர்ட்ஸ் உருவாக்கிய காலனிதான் ஹார்விபட்டி என்றால் சரிதான். மெஜிரா கோர்ட்ஸ் மேற்படி ஹார்விப்பட்டியை உருவாக்கும்போது அதன் தொழிலாளர் நலனுக்காக உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்காக A1303 என்ற மதுரை மில்ஸ் கூட்டுறவு சங்கம் மூலமாக தொழிலாளர்களுக்கு வீட்டடி மனை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் மனையை பகிர்ந்து கொடுக்கும் போது தொழிலாளர் சம்பளத்தில் இருந்து ரூ.600/- மாதம் மாதம் பிடித்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி கூட்டுறவு சங்கத்தில் அனைத்து பணம் செலுத்திய பின்புதான் மேற்படி மனை கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்படியே வாதியின் தந்தைக்கு 1959 ல் கிரையம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு மீதமுள்ள காலி இடம் எந்தவொரு தொழிலாளருக்கும் ஒதிக்கீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. யாருக்கு ஒதிக்கீடு செய்துள்ளீர்கள் என்றால் தொழிலாளருக்கு ஒதிக்கீடு செய்துள்ளோம். மேற்படி ஒதிக்கீடு செய்யப்பட்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதி வழக்கு

சொத்தில் டிப்பன் சென்டர் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வாதி எங்களது நிறுவனத்தின் பணியாளர் என்றால் சரிதான். 1959 ல் இருந்து வாதியின் தகப்பனார் மற்றும் வாதி வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஹார்விப்பட்டியை உருவாக்கி எத்தனை வருடங்களாக நிருவகித்து வருகிறோம் என்றால் மேற்படி கூட்டுறவு சங்கம் ஏற்படுத்திய நாள்முதல் நிருவகித்து வருகிறோம்.

3. எனக்கு தெரிந்துதான் ஹார்விப்பட்டியில் உள்ள நிர்வாகம் அனைத்தும் நடைப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி கூட்டுறவு சங்கம் எத்தனை ஆண்டுகாலமாக நடைமுறையில் செயல்பட்டு வந்தது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தப்பட்டு 1996 வரை செயல்பட்டு வந்தது என்றால் சரிதான். கடந்த 38 வருடங்களுக்கான ஹார்விப்பட்டி நிர்வாக விபரம் அனைத்தும் தெரியும் என்றால் ஆவணங்கள் மூலமாக தெரியும்.

4. 19.08.1996ம் ஆண்டு மேற்படி கூட்டுறவு சங்கத்தை கலைக்கவேண்டி துணை பதிவாளருக்கு விண்ணப்பம் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி எங்களது விண்ணப்பத்தை துணைப்பதிவாளர் ஏற்றுக்கொண்டாரா என்றால் ஏற்றுக்கொண்டார். துணைப்பதிவாளர் மேற்படி சங்கத்தை கலைக்க பிறப்பித்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. 25.06.1997 ல் சென்னை பதிவாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மெஜிரா கோர்ட்ஸ் நிருவனத்திற்கு கூட்டுறவு சங்கம் கலைப்பது சம்பந்தமாக சில விதிமுறைகள் கூறி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விதிமுறையில் கூட்டுறவு சங்கம் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள ஹார்விப்பட்டியில் தொழிலாளர்களுக்கு ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ள

நிலத்தின் மீதமுள்ள பகுதியையும் தொழிலாளர்களுக்கு மட்டுமே விற்பனை செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தொழிலாளர் நலனுக்காக பயன்படுத்தவேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வாதி தரப்பு வேண்டுகொளுக்கு இணங்கு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.22 10:05:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.